செ.வெ. எண்: 352 நாள்: 19–06–2012

# சென்னை பெருநகரில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவியின் சேவையை பெற செட் – டாப் பாக்ஸ் தேவையின் எண்ணிக்கையை தெரிவிக்க ஆப்பரேட்டர்களுக்கு காலக்கெடு 30–06–2012 வரை நீட்டிப்பு

சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள சந்தாதாரர்களுக்கு வழங்குவதற்காக எத்தனை செட்–டாப் பாக்ஸ் தேவைப்படுகிறது என்ற விபரத்தினை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் வெட்சைட்டில் ( {HYPERLINK "http://www.arasucable.com"}) உள்ள படிவத்தில் ஆன்லைனில் 15/06/2012 க்குள் பதிவு செய்யுமாறு ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

மேலும் சில கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் செட்டாப் பாக்ஸ் தேவையை பதிவு செய்ய தங்களுக்கு காலக் கெடு நீட்டிப்பு செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளதை ஏற்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி வெப்சைட்டில் பதிவு செய்ய 30/06/2012 வரை காலக் கெடு நீட்டிப்பு செய்யப்படுகிறது. இந்த நீட்டிப்பு காலத்திற்கு விடுபட்டுள்ள ஆப்பரேட்டர்கள் அனைவரும் தங்களுக்கு எத்தனை செட்டாப்–பாக்ஸ் தேவைப்படுகிறது என்ற விபரத்தினை தவறாது பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பாக ஏதேனும் உதவி தேவைப்பட்டால் 28221233 / 28233336 என்ற தொலைபேசிகளில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**